**ஸ்ரம வாசனா நிதியம் - 2024**
**----------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஸ்ரம வாசனா நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல்முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின்ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஸ்ரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் ஊடாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கஉண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அது சம்பந்தமாக நிர்வகிக்கின்ற தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பணியகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 சட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 இன் 15 ஆம் இலக்க ஸ்ரம வாசனா நிதிய (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1998 இன் 12 ஆம் ஸ்ரம வாசனா நிதியச் சட்டம் | | | |
| (i) | 3.3 உப பிரிவு மற்றும் 3.4 (2) (எ) உப பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, சபையானது அதன் கூட்டங்களின் நடைமுறை மற்றும் அக் கூட்டங்களில் செயலாற்றும் விதத்தினை முறைமைப்படுத்திக் கொள்ளுதல் தொடர்பாக விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரத்தினை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் மீளாய்வாண்டு இறுதி | விதி வரைவுகள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது மற்றும் தயாரிக்கப்பட்ட வரைவு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரையிலும் அவ்வாறான விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் நியாயசபை, நடுத்தீர்ப்பாளர் அல்லது தொழில் நீதிமன்றம் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளுக்காக ஊழியர்களுக்கு சட்ட உதவியைப் பெறுவதற்காக நிதிசார் சலுகைகளை வழங்குவதற்கு வேளைக்கேற்றப்படி உருவாக்குகின்ற விதிகளினால் சபையால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் பணத்தொகைக்கு உட்பட வேண்டியபோதிலும் தொடர்புடைய விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 14.1 உப பிரிவு | சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் அதற்கு தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான விளைவுகள் தொடர்பாக தேவையென சபை கருதும் விதிகள் மற்றும் சட்டத்தின் ஊடாக விதிகள் உருாக்கப்படும் போது அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது விதிகள் உருவாக்கல் அவசியம் என கருதப்படும் விடயங்களுக்காக விதிகள் சபையினால் உருவாக்கப்பட முடியுமான போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அவ்வாறான விதிகள் உருவாக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | 6 (ஆ) பிரிவு | ஊழியர்கள் சேவையில் ஈடுப்பட்டுள்ள நிறுவனங்கள் முன்னறிவிப்பின்றி மூடப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ் ஊழியர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகள் வழங்கப்படுவதற்கு 3 கட்டத்தின் கீழ் ரூபா 1.33 மில்லியன் ஒதுக்கப்பட்டு 11 தொழிநுட்ப கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொழில் திணைக்களத்தில் தொழில் முடிவுறுத்தும் பிரிவின் ஊடாக முன்னறிவிப்பின்றி மூடப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அவற்றில் தொழில் புரிந்தவர்கள் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்படும் மற்றும் அவ்வாறு அனுப்பப்படும் நலனாளிகளுக்கு தொழிநுட்ப உதவி பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் விண்ணப்பப்படிவங்கள் உள்ளடக்கப்பட்ட கடிதங்கள் 13 | சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்ற ப்படுவதற்கு போதுமான வகையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நலனாளிகளுக்கு அனுப்பட்டுள்ள போதிலும் அவர்களிடமிருந்து பதில் பெறப்படவில்லை. | |
| (iv) | 6 (ஊ) பிரிவு | ஊழியர்களின் நலனுக்காக விசேட சேவை புரிந்தவர்களுக்கு பரிசில் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டில் இந்த நோக்கிற்காக எந்தவொரு நடவடிக்கைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கில்லை. | ஸ்ரம வாசனா நிதியத்தில் 2021 தொடக்கம் 2025 ஆம் ஆண்டிற்காக ஐந்து ஆண்டுகால கூட்டிணைவுத் திட்டத்தின் பிரகாரம் ஸ்ரம வாசனா நிதியத்திற்கு பெறப்படுகின்ற வருமானம் மற்றும் ஏனைய விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு ஒவ்வொரு ஆண்டிற்கும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் மற்றும் அனைத்து ஆண்டிலும் ஊழியர்களின் நலனுக்காக விசேட சேவை புரிந்துள்ள நபர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படாததுடன் ஐந்தாண்டு திட்டத்தில் ஒரு தடவை மட்டும் இந்த நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 18,690,106 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 35,157,333 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதி விளைவுகளில் ரூபா 53,847,439 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானத்திற்கு இணையாக விசேட செயற்திட்டத்திற்கு செலவினை ஏற்றல் இந்த விளைவிற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிக்காட்டல் கோவையின் 1.2.1 பிரகாரம் பெறுகையின் அடிப்படை குறிக்கோள்களில் உயர்பட்ச சிக்கனத்தன்மை, நியமம் மற்றும் பயனுறுதியை அடைந்துக் கொள்ளுதல் பெறுகை நிறுவனத்தின் பொறுப்பாக காணப்படுகின்ற போதிலும், | 2024 ஆம் ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டம் 2023 யூலை 31 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கும் போது இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னர் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2023 திசெம்சர் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் பொருளாதார | பெறுகை வழிக் காட்டல்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்படாது 5 சந்தர்ப்பங்களின் போது மொத்த பெறுமதியான ரூபா 56.17 மில்லியனான பாடசாலை பைகள் மற்றும் புத்தகங்கள் கொள்வனவு செய்தமையினால் அரசாங்கத்திற்கு பெறப்படக்கூடிய உயர்பட்ச நலன் அடையப்பட்டிருக்கவில்லை. | நெருக்கடி காரணமனாக வறுமையினால் பாடசாலை மாணவர்களில் 54 சதவீதமானவர்கள் பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்வதில் நிதி சிரமங்கள் காரணமாக பாடசாலையை விட்டு நீங்கும் போக்கு அதிகரித்திருந்த காலப்பகுதியில் பணிப்பாளர் சபையினால் இந்த செயற்திட்டத்திற்காக 2024 சனவரி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நிதியேற்பாடு அங்கீகரித்துக் கொள்ளப்படுகின்ற மற்றும் திறைச்சேரியிடமிருந்து நிதி அவ்வப்போது பெறப்படுகின்ற பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | நிதியத்தின் ஒரு நோக்கமான கல்வியுதவி பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 16.9 மில்லியன் பயன்டுத்தப்பட்டு பாடசாலை புத்தகங்கள் மற்றும் பைகள் பகிரும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் பொது திறைச்சேரியிலிருந்து நிதி கிடைக்கும் வரையில் ரூபா 5 மில்லியன் ஆன நிதியில், இலங்கை வங்கியின் நிலையான வைப்புத் தொகையில் ரூபா 5 மில்லியனும், ஆண்டின் முதல் காலாண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 7.2 மில்லியன் ஆன நிதியேற்பாடு மற்றும் திட்டங்கள் முன் அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது. | கல்வியுதவி பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 3.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் 2023 திசெம்பர் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் காலத்தின் தேவை கருத்திற் கொள்ளப்பட்டு செலவு மதிப்பீடு ரூபா 3.5 மில்லியன் தொடக்கம் ரூபா 16.9 மில்லியன் வரை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலவின விடயங்கள் இடையே மாற்றப்பட்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் கல்வியுதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீட்டில் முதல் குறிக்கோளினை நிறைவேற்றிக் கௌ்வதற்கு ரூபா 19.7 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியேற்பாட்டிற்குள் 6500 பாடசாலை உபரகரணங்களுக்கான தேவையான பெறுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>அதற்காக நிதியத்தின் முதல் காலாண்டிற்காக கல்வியுதவிக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 7.2 மில்லியன் தொகை மற்றும் முதிர்வடைந்த பின்னர் 5 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புத் தொகை பயன்படுத்தப்பட்டதுடன் அத் தொகை பயன்படுத்தப்படுவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2024 பெப்ரவரி 26 ஆந் திகதி இதற்காக ரூபா 50 | திட்டம் மற்றும் நிதியேற்பாடு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டு பணிகள் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மில்லியன் தொகை ஸ்ரம வாசனா நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் நிலையான வைப்புத் தொகை 5 மில்லியன் மீண்டும் முதலிடப்பட்டிருந்தது. | |
| (இ) | பாடசாலை உபகரணங்கள் பகிர்தளிக்கும் செயற்திட்டத்திற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட உபகரணங்களின் கிரயத்தினுள் அதற்கு பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் உணவு, தங்குமிடவசதி, எரிபொருள், மேலதிக பணியாளர்களின் கிரயம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு ஆக மேலதிக கிரயமாக ரூபா 10.86 மில்லியன் ஏற்கப்பட்டிருந்தது. அதன் பிராரம் குறைந்த கிரயத்தில் பொருட்கள் பகிர்ந்தளித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிராமையினால் அதற்கான மொத்த கிரயத்தில் நிர்வாக செலவீனமாக 20 சதவீதம் ஏற்கப்பட்டிருந்தது. | இந்த நிகழ்ச்சித் திட்டம் நடத்துவதற்கு ஏற்கப்பட வேண்டிய அத்தியாவசிய செலவீனம் மட்டும் ஏற்கப்பட்டிருந்ததுடன் அதில் 75 சதவீதம் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை செலவீனத்திற்காக (நலனாளிகளில் உணவு குடிநீர், போக்குவரத்து செலவீனம், உபகரணங்கள் தொகுப்புக்களின் போக்குவரத்து செலவீனம் மற்றும் பெறுகை செலவீனம்) ஆவதுடன் மேலதிகமாக செலவீனம் ஏற்கப்படாததுடன் மொத்த செலவீனத்தில் 25 சதவீதம் ஏற்கப்பட்டிருந்தது இந்த நிகழ்ச்சித் திட்டம் வார இறுதி நாட்களில் நடத்தப்பட்டமையினால் மேலதிக நேரக் கொடுப்பணவு, விடுமுறை தினக் கொடுப்பனவு மேற்கொள்வதற்கும் நிகழ்ச்சித் திட்டம் தூரப் பிரதேசங்களில் நடத்தப்பட்டமையினால் உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதி பெற்றுக் கொடுக்கப்பட்டமையினாலும் ஸ்ரம வாசனா நிதியத்தில் குறைவாக பதவியணியினர் காணப்பட்டமையினால் உதவி ஊழியர்கள் மற்றும் பயிற்சி பெறும் ஊழியர்களையும் பயன்படுத்தியமையினாலேயும் ஆகும். | உயர்ந்தபட்ச நலன் பொது மக்களுக்கு பெறப்படும் வகையில் நோக்கத்திற்குரிய பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்திட்ட செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாடசாலை பைகள், புத்தகங்கள் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பொதியிடுதல், அவ்வப்போது நாடு முழுதும் பகிர்ந்தளித்தல் 2024 பெப்ரவரி தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வந்ததுடன் போதுமான பதவியிணர் இல்லாமையினால் முறையான உள்ளக கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை நிலவுவதாக அவதானிக்கப்படாததுடன், நிறுவனத்தினால் கட்டளையிடப்பட்ட பாடசாலை உபகரணங்கள் மற்றும் | ஸ்ரம வாசனா நிதியத்தினால் ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் தேவைப்படுகின்ற பாடசாலை பைகள் மற்றும் புத்தகங்கள் கட்டளை இடப்பட்டதுடன் முன்னர் பாடசாலை பைகள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாவட்டங்களில் எஞ்சியிருந்த பாடசாலை பைகள் அடுத்த மாவட்டங்களுக்கு பயன்படுத்திமையினால் கட்டளையிடப்படும் போது சில மாவட்டங்களுக்கு குறைவாக கட்டளை இடப்படுவதற்கு நேர்ந்தது. | பொருட்கள் சரியாக கட்டளை இடப்பட்டு கையேற்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கட்டளை இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | இடர் சந்தர்ப்பங்களின் போது ஊழியர்களுக்கு அல்லது அவர்களை சார்ந்தவர்களுக்கு நிதிசார் மற்றும் வேறு பிரதிலாபம் வழங்குவதற்காக புலமைபரிசில் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மற்றும் இடர் நிவாரண நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா 8 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்டிருந்த 100 புலமைபரிசிலில் 9 மட்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 0.47 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட 09 புலமைபரிசில் பெறுநர்களுக்காக புலமைபரிசில் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் நலன் குழுவினால் அங்கீகரிக்ப்பட்ட புலமைபரிசில் பெறுநர்களுக்காக பணிப்பாளர் சபை கூட்டமொன்று நடத்தப்படாமையினால் அங்கீகரித்துக் கொள்ளப்படாததுடன் 2025 சனவரி நடத்தப்பட்ட பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 23 புலமைபரிசில் பெறுநர்களுக்காக பிரதிலாபம் செலுத்தப்பட்டுள்ளது.<br>ஸ்ரம வாசனா நிதியத்திற்கு இடர் நிவாரண நிகழ்சி திட்டங்கள் தொடர்பாக அறிக்கையிடப்படாமையும் விசேடமாக நாட்டினுள் தேர்தல் காலவரையறைகள் இரண்டு செயற்படுத்தப்பட்டமையினால் 2024 ஆம் ஆண்டினுள் இந்த நிகழ்சித்திட்டம் செயற்படுத்தப்பட இயலாது போனது. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | 2024 ஆம் ஆண்டின் யூலை வரை விசேட நிகழ்சிதிட்டங்களுக்காக விசேட கவனம் செலுத்தல் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திருத்தம் காரணமாக ரூபா 6.83 மில்லியனுடனான திட்டமிடப்பட்டிருந்த 9 நிகழ்சித்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>விழிப்புணர்வு நிகழ்சித்திட்டங்கள், மரண விபத்து புலமைபரிசில் நிகழ்சித்திட்டங்கள், சட்ட உதவி மற்றும் மருத்துவ உதவி நிகழ்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 28.15 மில்லியன் தொகையில் குறித்த செயல்திறன் மட்டம் அடையப்படுதல் 13-40 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | ஸ்ரம வாசனா நிதியத்திற்கு இடர் நிவாரண நிகழ்சி திட்டங்கள் தொடர்பாக அறிக்கையிடப்படாமையும் விசேடமாக நாட்டினுள் தேர்தல் காலவரையறைகள் இரண்டு செயற்படுத்தப்பட்டமையினால் 2024 ஆம் ஆண்டினுள் இந்த நிகழ்சித்திட்டம் செயற்படுத்தப்பட இயலாது போனது மற்றும் நிகழ்சித்திட்ட செயல்நடவடிக்கை திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிராமை. | -மேற்படி- |
| (ஈ) | ஊழியர்களின் மற்றும் அவர்களை சார்ந்தோரின் நலனை மேம்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தில் 25 விசேட நிகழ்சித்திட்டங்கள் அன்று | 6 சட்ட உதவி நிகழ்சித்திட்டங்கள் மற்றும் 3 சட்ட சலுகை பெற்றுக் கொடுக்கும் நிகழ்சித்திட்நடகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எஞ்சிய 50 சட்ட உதவி நிகழ்சித்திட்டங்கள் மற்றும் 20 சட்ட சலுகை பெற்றுக் கொடுக்கும் நிகழ்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1.85 மில்லியன் தொகையில் ரூபா 0.39 மில்லியன் செலவிடப்பட்டு 6 சட்ட உதவி நிகழ்சித்திட்டங்கள் மற்றும் 3 சட்ட துணை பெற்றுக் கொடுக்கும் நிகழ்சித்திட்ஙடகள் மட்டும் நடத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | அவசர சந்தர்ப்பத்தின் போது ஊழியர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்படுவதற்கு 2024 ஆம் ஆண்டில் ரூபா 1.45 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு செயற்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ உதவி மற்றும் வேறு வசதியளிப்பதற்காக நலனாளிகள் 2024 ஆம் ஆண்டில் அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் 2024 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் பணிப்பாளர் சபை கூட்டமொன்று நடத்தப்படாமையினால் அங்கீகரித்துக் கொள்ளப்பட முடியவில்லை. | -மேற்படி- |